**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.497/2023**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 19.09.2025.**

| | |
|---|---|
| **Name : குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மலையம்பாளையம் காட்டுவளவில் குடியிருந்து தறி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் வீட்டுக்கு அருகில் குடியுள்ளார். சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு இரவு நான் வீட்டிலிருந்த போது அசா.1ன் வீட்டிற்குள் சத்தம் கேட்டு ஓடி போய் பார்த்தோம். அ.சா.1 யை விசாரித்த போது அவர் வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் போது யாரோ சிலர் வீட்டிற்குள் வந்து கழுத்திலிருந்த நகையை திருடிச் சென்றதாக கூறினார். போலீசார் சம்பவயிடம் வந்து அ.சா.1 ன் வீட்டிற்கு அருகில் வந்து என்னிடமும், நடேசன் என்பவரிடமும் அதிலுள்ள விவரங்களை சொல்லி கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. பார்வை மகஜரிலுள்ள 1 வது கையெழுத்து **அ.சா.ஆ. 2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2) கடந்த 30.09.2022 ம் தேதி இரவு 1 மணியளவில் அ.சா.1 சத்தம் போடுவதை கேட்டு வெளியே சென்ற போது அடையாளம் தெரியாத நபர்கள் அவர் வீட்டிலிருந்து ஓடியதாகவும், விசாரித்த போது அவர் வீட்டிற்குள் படுத்திருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் அவர் கழுத்தில் அணிந்திருந்த 2 3/4 பவுன் தங்க செயினை கையில் பறித்த போது 2 பவுன் மட்டும் எதிரிகளிடம் சிக்கியதாகவும் அது சம்மந்தமாக போலீசார் 01.10.2022 ம் தேதி பகல் 3 மணிக்கு அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து எங்கள் முன்னிலையில் விசாரித்த போது தெரிந்து கொண்டோம் என்றும் நடேசன் மற்றும் என் முன்னிலையில் சம்பவயிடத்தை படம் வரைந்து எழுதி அதிலுள்ள விவரத்தை படித்து காண்பித்த பிறகு தான் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

D.Myilswamy

Digitally signed by D.Myilswamy
Date: 2025.09.19 17:09:03 +0530

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C.497/2023**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 19.09.2025.**

| | |
|---|---|
| **Name : நடேசன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் மலையம்பாளையம் காட்டுவளவில் குடியிருந்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் வீட்டுக்கு அருகில் குடியுள்ளார். சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு இரவு நான் வீட்டிலிருந்த போது அசா.1ன் வீட்டிற்குள் சத்தம் கேட்டு ஓடி போய் பார்த்தோம். அ.சா.1 யை விசாரித்த போது அவர் வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் போது யாரோ சிலர் வீட்டிற்குள் வந்து கழுத்திலிருந்த நகையை திருடிச் சென்றதாக கூறினார். போலீசார் சம்பவயிடம் வந்து அ.சா.1 ன் வீட்டிற்கு அருகில் வந்து என்னிடமும், குமார் என்பவரிடமும் அதிலுள்ள விவரங்களை சொல்லி கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. பார்வை மகஜரிலுள்ள 2 வது கையெழுத்து **அ.சா.ஆ.** 3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 30.09.2022 ம் தேதி இரவு 1 மணியளவில் அ.சா.1 சத்தம் போடுவதை கேட்டு வெளியே சென்ற போது அடையாளம் தெரியாத நபர்கள் அவர் வீட்டிலிருந்து ஓடியதாகவும், விசாரித்த போது அவர் வீட்டிற்குள் படுத்திருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் அவர் கழுத்தில் அணிந்திருந்த 2 3/4 பவுன் தங்க செயினை கையில் பறித்த போது 2 பவுன் மட்டும் எதிரிகளிடம் சிக்கியதாகவும் அது சம்மந்தமாக போலீசார் 01.10.2022 ம் தேதி பகல் 3 மணிக்கு அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து எங்கள் முன்னிலையில் விசாரித்த போது தெரிந்து கொண்டோம் என்றும் குமார் மற்றும் என் முன்னிலையில் சம்பவயிடத்தை படம் வரைந்து எழுதி அதிலுள்ள விவரத்தை படித்து காண்பித்த பிறகு தான் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

D.Myilswamy

Digitally signed by D.Myilswamy
Date: 2025.09.19 17:09:18 +0530